**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.12/2020 |
| Prosecution Witness | : | **அ.சா.3** |
| Name | : | **அக்பர் பாஷா** |
| Father's/Husband Name: | : | ஜான்பாஷா |
| Address : | : | 265 ஏ, ஆசியா நகர், மேட்டுத்தெரு, வடக்கு மாதவி ரோடு, பெரம்பலூர். |
| Age | : | 68/2022 |

<u>தேதி: 02/03/2022</u>

**முதல் விசாரணை :** <u>சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.</u>

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன், நான் இல்லதரசியாக உள்ளேன். புகார்தாரர் எனது மகன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. தேதி மாதம் நினைவில்லை.நானும், எனது குடும்பத்தினரும் அரும்பாவூருக்கு எங்களது உறவினரின் வீட்டின் கிரகபிரவேசத்திற்காக சென்றிருந்தோம். ஆனால் எனது மகன் வீட்டில் தான் இருந்தார். அன்றைய தினம் எங்களது மகன் எங்களை அழைக்க வந்தார். சுமார் 10 மணியளவில் நாங்கள் வீட்டிற்கு வந்த போது, எங்களது வீட்டில் உள்ள பொருட்கள் சிதறி கிடந்தது. சுமார் 10, 14 பவுன் நகைகளும், பணமும் காணாமல் சென்றதாக எனது மகன் கூறினார். இது சம்மந்தமாக எனது மகன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். என்னென்ன நகைகள் காணாமல் சென்றது என தற்போது

நினைவில்லை. தகவலின் அடிப்படையில் காவல் துறையினர் வந்து விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை :**

நீதிமன்ற விசாரணையில் கூறிய விபரங்களை தான் காவல்துறையினர் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை. எங்களது வீட்டில் இருந்து எந்த நகையோ, பணமோ காணாமல் செல்லவில்லை என்றாலும், எனது மகன் தவறான புகாரை கொடுத்துள்ளார் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

**Sd/-**

Judicial Magistrate No.I,
Perambalur.

JM.I,PBLR

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.12/2020 |
| Prosecution Witness | : | அ.சா.2 |
| Name | : | **ஜரினா பேகம்** |
| Father's/Husband Name: | : | அக்பர் பாஷா |
| Address : | : | 265 ஏ, ஆசியா நகர், மேட்டுத்தெரு, வடக்கு மாதவி ரோடு, பெரம்பலூர். |
| Age | : | 54/2022 |

<u>தேதி: 02/03/2022</u>

**முதல் விசாரணை :** <u>சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.</u>

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன், நான் இல்லதரசியாக உள்ளேன். புகார்தாரர் எனது மகன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. 13/08/2017 அன்று எங்களது உறவினரின் வீட்டின் கிரகபிரவேசம் அரும்பாவூரில் இருந்தது அதற்காக நாங்கள் காலை 11.00 மணிக்கு என குடும்பத்தினர் அங்கு சென்றுவிட்டோம். ஆனால் எனது மகன் வீட்டில் தான் இருந்தார். மாலை 6 – 7 மணியளவில் எனது மகன் நடைபயிற்சி செய்வதற்காக வெளியே சென்றுள்ளார். நாங்கள் திரும்பும் போது எங்களை அழைக்க வரும்படி கூறினோம். எனது மகனும் வந்து அவருடைய பைக்கில் அழைத்து சென்றார். நாங்கள் வீட்டிற்கு சென்ற போது எனது வீட்டின் கதவு பூட்டிய மாதிரி தான் இருந்தது. ஆனால் வீட்டிற்குள் சென்று பார்த்த போது, பீரோவின் கதவு உடைக்கப்பட்டு பொருட்கள்

அனைத்தும் சிதறி கிடந்தது. வீட்டில் 2 பிரோக்கல் உடைக்கப்பட்டிருந்தது. நகைகள் கருகமணி செயின் - 5 பவுன், சாதா செயின் 3 பவுன், தோடு மற்றும் மாட்டல் -2 பவுன், வேறொரு சுற்ற மாட்டல் 1 1/2 பவுன் மற்றும் சங்கு மோதிரம் 1 3/4 பவுன், 4 சிறிய மோதிரங்களின் மொத்த எடை 1 1/2 பவுன், வெள்ளி சாவி கொத்து-1 மற்றும் கொலுசு 6 காணாமல் போயிருந்தது. மறுநாள் ஒரு இடத்தை முடிப்பதற்காக நாங்கள் அந்த பணத்தை வைத்திருந்தோம். ஆனால் அதற்குள் காணாமல் போயிருந்தது. இது குறித்து எனது மகன் காவல் துறையில் புகார் கொடுத்தார். இது குறித்து காவல்துறையினர் விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடந்து கேள்விபட்டு நாங்கள் வரவில்லை. நாங்கள் வீட்டிற்கு சென்று பார்த்த பிறகு தான் சம்பவ நடந்தது தெரிய வந்தது. நீதிமன்ற விசாரணையில் கூறிய விபரங்களை தான் காவல்துறையினர் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சுமார் 1/2 மணி நேரம் கழித்து காவல்துறையில் தகவல் கொடுக்கப்பட்டது. அன்றைய தினமே புகார் கொடுக்கப்பட்டதா என எனக்கு தெரியவில்லை. ஆனால் காவல்துறையினர் வந்தனர். கைரேகை நிபுணர்கள் வந்தார்கள். மோப்ப நாய் வரவில்லை, நாங்கள் ரூ.1 லட்சத்தை நீதிமன்றத்தில் இருந்து பெற்றோம். எந்தெந்த பீரோவில் என்னென்ன நகைகள் வைக்கப்பட்டது என காவல்துறையினர் விசாரணையின் போது நான் கூறவில்லை. எங்களது வீட்டில் இருந்து எந்த நகையோ, பணமோ காணாமல் செல்லவில்லை என்றாலும், எனது மகன்

தவறான புகாரை கொடுத்துள்ளார் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

***Sd/-***

Judicial Magistrate No.I,
Perambalur.

JM NO.I, PBLR